91

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்.

இஃது

முஸ்லிம்பிறவிகள் அற்புதமாகிய நற்புதினங்க ளறியவும்

உமர்(ரலி) அவர்கள் கிலாபத்தும், நடக்கைகளையும்,

நீதங்களையும் விளங்கக் கூறும்

தவ்லதே தாரைன்

(என்னும்)

இருலோக சம்பத்து.

மூன்றும் பாகம்

முஅஜிஸாத்தே ரசூல் (மஅ)அதாலதே உமர் பாறாக்.

——:O:——

இதனை

வாலாஜா தாலுக்கா மேல்விஷாரம்

கடைக்கார அப்துல்கனீ சாஹிபவர்கள் குமாரர்

(அஹ்ஸன்) க. முஹம்மது இப்றாஹீம்சாஹி பவர்களால்

கோர்வைச் செய்து

கல்விக் கடல்களாகிய அனந்தம் உலமாக்களால்

பரிசோதித்து, மதராஸ் பந்தர் ஸ்டிரீட் ஷாப்பு

(கந்தனேரி)

ஆலீஜனுப் க. அஹ்மத்ஹூஸைன் சாஹிப்

கம்பெனியா ரவர்கள் முயற்சையால்

சென்னை

P. ஷண்முகம் அண்டு கம்பெனியாரால் அச்சிடப்பட்டது.

முதற் பதிப்பு.

ஹிஜூரத்து 1348ப்
ஷல் துல் ஹஜ்ஜூமீ

ரிஜிஸ்த்தர்
காபிரைட்.

ஸ்டிப்பயிண்டு 1-க்கு
விலை அணா 6.

போஸ்டு மாறலாக
வி. பி. யில் அணா 9.

ரிஜிஸ்த்தர் அறிவிப்பு.

இந்த தவ்லதே தாரைன் (என்னும்) இருலோக சம்பத்து. (மூன்ரும் பாகம்) முஅஜிஸாதே ரசூல் (மஅ) அதாலதே உமர்பாறூக். என்னும் பெயருள்ள புத்தகத்தை கனம்பொருந்திய கௌவர்ன்மெண்டு புக்ரிஜிஸ்தரார் சட்டப்படிக்கு சென்னையிலும், புதுவையிலும், ரிஜிஸ்த்தர் செய்திருக் கின்றமையால் இதனைக் கோர்வை செய்து, அச்சிற் பதிப்பிட்டு வெளியிட்டவரான மேல்விஷாரம் கடைக்கார அப்துல்கனீ சாகிபவர்கள் குமாரர் (அஹ்ஸன்) க. முஹம்மது இப்ருஹீம் சாஹிபவர்கள் அநுமதியின்றி இப்பெயர் பொதிந்த புத்தகத்தையாகிலும், இதில் பொதிந்துள்ள பாடல்களையாகிலும், அச்சிடப்படாது. அவ்வாறு அச்சிட்டால் அச்சிட்டவர்களும், அதைப்பதிப்பித்துக் கொடுக்கும் அச்சுக்கூடத் தலைவர்களும், கௌர்ன்மெண்டு புக் ரிஜிஸ்த்தரார் சட்டப்படிக்கி ஷை யார் கோறும் நஷ்டங்களுக்கும், செஷன் குற்றத்திற்கும், உட்படுவார்களென்பதை யாவரும் அறிவீர்களாக.

இங்ஙனம்

(அஹ்ஸன்) க முஹம்மது இப்ருஹீம்.

மேல்விஷாரம்.

கவனிப்பு

இந்த தவ்லதே தாரைன் (என்னும்) இருலோக சம்பத்து ஐந்து பாகம், கோர்வையா யுள்ளதில் றஹ்மானுதவியால் மூன்றுபாகம் வெளிவந்தது. இன்ஷாஅல்லாஹு மற்ற இரண்டு பாகங்களும் கூடிய சீக்கிரம் வெளிவருமென்பதை அறிவீர்களாக.

இந்தப் புத்தகத்தின் இரண்டாம் பாகத்தில் குறிப்பிட்டுள்ள ஹதியாக்களைப் பார்வையிட்டு, விருப்பமுள்ளவர்கள் நேரில் அல்லது எழுத விலாசம்,

அஹ்ஸன் புக்டிபோ,

மேல்விஷாரம் போஸ்டு, நார்த்தாக்காடு.

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா நிர்ரஹீம்.

இஃது

தவ்லதே தாரைன்

(என்னும்)

இருலோக சம்பத்து.

———:o:———

மூன்றாம் பாகம்.

முஅஜிஸாதே ரசூல் (மஅ) அதாலதே உமர் பாறூக்.

காப்பு விருத்தம்.

இந்தமுஅஜி ஸாத்தேரசூல் ஏற்றஉமர் நீதமெனும்
விந்தைகளாம் புதுமைகளை விளம்பிடுமின் நூலிதனை
சிந்தைமகிழ்ந் தோதுவர்கள் செழித்துமனங் களிப்படைய
செந்தமிழிற் சொல்வதற்கு சிறந்தவனே நீகாப்பு. (1)

ஹம்து வ, நஅத்து.

—:o:—

தோங்கல்.

ஆதமீமற்றும் படைப்பையாளும் அல்லா(ஹ்)ஒருவனை மிகப் புகழ்ந்து, காதங் கமழ்நபி மீதுமவர் கருணையுளதோழர் சகுபிகள் மேல், போதமுடன்சலவாத்தும்சலாம் போற்றியேநபி புதினம் முடன், நீதராம்உமர் நடக்கைச்சில நிகழ்த்த வேண்டிய கருத்துரைப்பாம். (2)

அவை யடக்கம்.

நல்லார் நபியுல்லா மகிமையோடு நாயகர்உமர் நீதங்களே
சல்லாபமாக படித்துணர்ந்தால் சங்கைநபியுல்லா மகிமையாய்ந்து
பொல்லா செயல்களே விட்டகன்று பூணிநல்அமல் செய்வாரென்
றும், வல்லான் னபிதங்கள் முஅஜிஸாத்தை வகுக்கவல்லவன் றனே
நாடியே. (3)

கருணே தீனேர்வாழ் மேல்விஷாரில் கடைக்காரஅப்துல் கனீ
புதல்வன், சிருமையுளஆவீ அஹ்ஸனேன்போன் சிறந்தோன் கிரு
பையால் கோர்வைசெய்தே, மருங்கா மறிவாள ரனந்தம்பேர்கள்
மனதுக் குவப்பாக பார்வையிட்டே, அருமை ஹிஜுரத்தா யிரத்தி
முன்னூற் றகன்றே நார்பத்தி எட்டாமாண்டில். (4)

அமரிக் கன்லண்டன் சைஞ ஜாபான் அனந்தம் பலதேச சாமான்
களே, விமரி சையாக வழைத்தேபாரம் விருப்ப சென்னேமா நகரி
லோங்கி, கமர்போ விலங்கும் கே. அஹ்மத்ஹுஸைன் கம்பனியார்
கள் களிப்புடன்செய், தமது முயற்சையா லச்சிவிட்டு தரணி தனி
லிந்நூல் வெளியானதே. (5)

ந அ த் து.

—:o:—

இராகம் நாலடித்தரவு கோச்சகக் கலிப்பா.

எல்லாம் படைக்கு முன்னேவற்றமுத்தாய் கண்ணடியாய்
நல்லா மயில்வடிவாய் நலத்தப் பலவிதமாய்.
பல்லாயி ரமாண்டாய் பாங்கான ஹம்துசுஜுத்
அல்லா தனக்குசெய்த ஹாமிதி ரசூல்நபியே. (1)

குன்னென் றுரைக்கபய கூனென்றே குல்ஆலம்
மன்னும் பலபடைப்பு மாநிலமெல் லாம்சிறந்த

வின்ன மில்லான்றாதே வேதநபி கட்கரசே
கன்ன லமிர்தமொழி ஹாமிதிர சூல்நபியே. (2)

வேண்டிதீன் பறத்தமுன்னோர் வேணபாடு பட்டுமாகா
ஆண்டிரு பத்மூன்றில் அடர்திசைநான் கெட்டுதிக்கும்
தீண்டா மணிவிளக்காய் தீனொளிது லக்கிஎங்குங்
காண்கவே காட்டுமெங்கள் ஹாமிதிர சூல்நபியே. (3)

அண்டங்கள் ஏழும் அல்லிற்கடந்து சென்று
விண்டபல் ரகசியங்கள் வேந்தனிடம் பேசிடவே.
அண்டர்புகழ் கபுசோட அருஷேரி மீண்டுவந்து
கண்டப் புதினக்கூறும் ஹாமிதிர சூல்நபியே. (4)

அல்லல் அமளியந்நாள் அன்பியாக்கள் நபுசெனும்நாள்
வல்லய மளவிற்கதிர் வாட்டியே தீட்டுமந்நாள்.
சொல்லாலென் உம்மத்தியா உம்மத்தி என்றேங்கி
அல்லல் அகற்றுமெங்கள் ஹாமிதிர சூல்நபியே. (5)

கித்தாபின் துவர்க்கம்.

—:o:—

கண்ணிராகம்.

ஹக்க னருள்லகத் மன்னல்லாஹ ஆயத்துட
தக்க கருத்தைக் கொண்டு தகமை சிலதுரைப்பாம். (1)

மூமினோர்க் குபகாரம் முன்னோனவாள் நப்சில்
நேமித் தனுப்புமெங்கள் நீதர் நபிஇரசூல். (2)

ஆயாத்து கள்ஓதி அடியருள்மை துய்தாக்கி
நாயன் மறைஹிக்மத் நலங்காட்ட வந்த ரசூல். (3)

வெட்ட வெளிச்சமான வழிகேட்டி லுற்றமனு
நட்ட மகற்றவழி நலம்பூட்ட வந்தாரசூல். (4)

படைத்தோன் நபிவருமுன் பதிமக்கா நாடெங்கும்
மடத்தன மிகுத்தவக்கால் மார்க்க முறைத் தந்தரசூல். (5)

மார்க்கம் மனுவோர்க்கு மனம்போன போக்கதுபோல்
மூர்க்க மிகுத்தவக்கால் முன்னோ னனுப்பும் ரசூல். (6)

மூடத்தன காலத்தின் மூடர்களின் மூர்க்கத் தனம்.

கண்ணிராகம்

ஆதி திருத்தூதர் அவனியிலு திக்குமுன்னர்
ஜாதி அரபிகளிற் சார்ந்த கேட்டை யுரைப்பாம். (7)

தொங்கல்.

அவனி யில்ஈசா நபிக்கிபின்னர் ஐநூத்தெழுபது வருடமட்டும்
எவரும்நபியில்லை தீனுமில்லை ஏற்றநீதங்கள் செய்வாரில்லை
தவருநலமென உணர்வாரில்லை தனதுமனம்நாடல் மார்க்கமாக்கி
பவரும் பெருமையாய் நடந்தமூடர் பார பெருங்கேட்டைப் பகரக்
கேளீர். (8)

பரவை முட்டைக்காக அன்பதாண்டு சண்டை.

தொங்கல்.

ஒருவன் தோட்டத்தில் பரவைமுட்டை உள்ளதை மற்றோ னுடைத்த ததற்காய், இருவகைகட்சி யாகசேர்ந்து இடர்சண்டை நீக்க நீதமில்லா, சருகா தடிபிடி வெட்டுகுத்தால் சாற்று மைம்பது வருடமட்டாய், பெருத்தக் கலக்கமா யிரகணக்காய் பிணக்காடாய் மனு மடிந்தார்களே. (9)

கண்ணிரரகம்.

பரவை முட்டைக்காகப் பாரச்சண்டை யம்பதாண்டாய்
கரக்க மிகுத்தவக்கால் கருமமறுந்தாய் வந்தாரசூல். (10)

மாட்டின்காலை வெட்டலால் அநேகமாண்டு சண்டை.

தோங்கல்.

பின்னு மொருவனின் பயிரைமாடு பிடிங்கிதின்கவே மாட்டின்காலை நன்று பயிரிட்டோன் வெட்டிப்போட நன்கற்றவிரு கக்ஷிசேர்ந்து இன்பில்லாதடி வெட்டுகுத்தால் எதிர்த்து பலவாண்டாய் போரா டலை, தென்பாய் தீர்ப்பவ ரில்லாமலே திவ்யமனுமிக மடிந்தார்களே.

கண்ணிராகம்.

மாட்டின் காலைவெட்டலால் மாப்பெரும்போர் மிகவாண்டாய்
தாட்டியாய் நடக்குமக்கால் தாரணியில் வந்தாரசூல். (12)

குதிரைக்கிமுன் தண்ணீர்குடிப் பாட்டலால் சண்டை.

தோங்கல்.

இருபேர் குதிரையில் முந்தியொத்தன் இதமாய் நீர்குடிப் பாட்ட வெட்ட, பெருத்த கலக்கமா யிரகணக்காய் பெரும்போர் நடக்கயில் நீதமில்லா, சருகா தைம்பது வாண்டுமட்டாய் சதிசெய் மூடர்கள் மிகுத்தவக்கால், தரும நீதிகள் தரையிலோங்க தனியோன் புற காணைத் தந்தாரசூல். (13)

கண்ணிராகம்.

குதிரைக்கி முன்தண்ணீர் குடிப்பாட்டி ஞேனைவெட்ட
சதிபோர் ஸமானவில் சமர்தவிர்க்க வந்தாரசூல். (14)

குதிரையை முன்விட்டோனை வெட்டின சண்டை.

தோங்கல்.

இருவர்குதிரையி லொருவன்முந்த இடருகஒத்தன் பதுங்கி வெட்ட, மருங்காம் நீதங்க ளில்லாததால் மாப்பெ ரும்போரா யறுப தாண்டாய், அருமைய வருற்று ரிருகக்ஷியாய் அனந்த மாயிரர் மடியுமக்கால், பெருத்த மடையரைத் திருத்தவேண்டி பிலத்தில் நபியாய்வந் துதித்தாரசூல். (15)

கண்ணிராகம்.

பரியைமுன் விட்டவனை பதுங்கிவெட்ட அறுபதாண்டாய்
வெரிபோர் செய்மூடர்கட்கு வேதநெறி தந்தரசூல். (16)

வீரனின் கால்வெட்டலால் எழுபதாண்டு சண்டை.

வீரனொருவனும் சபையில்நின்று வீரத் தனத்தார்க்கால்நகட்டு மென்று, சூரத் தனம்பேச ஒருவன்வந்து சோரவீரனின் காலை வெட்ட, தீரமாயதி விருகக்ஷியாய் திரமேழ் பத்தாண்டாய் மிகவாயிர பாரமனுவுகள் மடியுமக்கால் பாங்காம்நெறிநீதி தந்தரசூல். (17)

கண்ணிராகம்.

வீரனின் கால்வெட்டலால் வியர்ந்தேழு பத்தாண்டாய்
தீர சமர்புரிகால் தீன் நெறியைத் தந்தரசூல். (18)

அரபிகள் பெண்குழந்தையை உயிருடன் புதைத்தல்.

தோங்கல்.

அரபிகள் பெண்டிர் பெண்ணைபெற்றால் ஆகுங்குலத்துக்கு ஈன மென்று, இரக்க மருநெஞ்சாய் குழியைத்தோண்டி இதமாம் மதலை யை சந்தோஷமாய், உறத்தப் பெருமையாய் குழியிலிட்டு உயர்வாங்

குலமென உரைக்குமான, திறத்தமூடர்கள் காலத்திலே தீனின் பிரகாசம் தந்தரசூல். (19)

கண்ணிராகம்.

மானத்தார்ப் பெண்மக்களை மண்ணறையில் உயிரோடு
உளனமாய் புதைக்குமக்கால் உலகில்நெறி தந்தரசூல். (20)

கைம்பெண்கள் குப்பைமேட்டில் இத்தாயிருப்பது.

தோங்கல்.

புருஷபாரியர் வாழும்நாளில் புருஷன்மரித்திடில்* பறைவறைய வரும்போ தொவ்வொரு வீட்டார்களும் வழமைப் போலொரு கூடைகுப்பை, சருகாகொட்டவே மேடாகவே சஞ்சலமுள்ள கைம்பெண்தனை, இருக்க வேஇத்தா குப்பைமேட்டில் ஏற்றி யொருவாண்டு வைப்பார்களே. (21)

ஆண்டு முடியமுன் குப்பைமேட்டை அகன்றே அப்பெண்ணு மிறங்கொண்ணாது, வேண்டும் ஊணுந்தீன் குப்பைமேட்டில் வேண்டியே யல்லா லுண்ணொண்ணாது, மூண்ட மலஜலங் கழுகொண்ணாது முழுகி யுடல்சுத்தம் செய்யொண்ணாது, பூண்ட நிபந்தனை யாலல்இத்தாப் பூர்த்தி யாமவர் மார்க்கமாமே. (22)

வருடஞ் சென்றது மம்மாதுவை வகையாய் முழுக்காட்டி உடுப்புடுத்தி, சருகா தவளுட மடியில்ஒட்டை சாணலத்தியை கொட்டி வைத்து, ஒரு ‡வாலயத்தின் முதுகிலேற்றி ஊர்கோலம்சுற்ற சாணமள்ளி, வருவோர் போவோர்மே லப்பெண்வீச வகைஇத்தா தீர்ந்த தாக்குமென்பார். (23)

---

* பறைவறைய என்பது, நகாரா அடிக்க அல்லது, முனாதிசெய்ய என்றறிக.

‡ வாலைய மென்பது, கழுதை என்றறிக.

கண்ணிராகம்.

ஆண்டொன்று இத்தாவு மரிவையாள் குப்பைமேட்டில்
நீண்டத் துயரடைக்கால் நிலமிசை வந்தரசூல். (24)

திருவாணியாய்க் குளித்தல் வணங்கல்.

தோங்கல்.

அரபிகள் ஆடை இல்லாமலே அமணமாகவே குளித்திடுவார்
வரங்கள் கேட்கவே புத்துக்களை வணங்க கஅபாவில் திருவாணியாய்
சரச மாய்போய் வருகுமான *ஜாஹிலிய்யது மிகு காலத்தில், உரமா
யொழுக்கத்தை யுலகத்தார்க்கு ஓதித் திருத்தவே வந்தரசூல்.

கண்ணிராகம்.

அமண மாய்குளிப்பார் ஆடையிடார் கஅபாபோய்
நமஸ்காரம் புத்துகட்கு நாட்டுமக்கால் வந்தரசூல். (26

கண்ணிராகம்.

ஈசா நபிக்கிபின்னர் இருளடைந்தக் குபிரகற்ற
ஆசர்ன் அனுப்புமெங்கள் அஹ்மத்நபிஇரசூல். (27)

மக்கநாடு பஞ்ஜத்தால் மனுமிருகம் பக்ஷிகளின்
துக்க மகலமழை தொடர்ந்தொலிக்க வந்தரசூல். (28)

க்ஷேமத் துக்குவர்க்கம் சிறந்தரபீ உல்அவ்வல்
நாமம் றபீஅஎன்பது க்ஷேம திங்கள் வந்தரசூல். (29)

முப்பத்தி ஆறுபத்து மூரியாட்டப் புத்தனைத்துங்
குப்புர முகங்கவிழ குவலயத்தில் வந்தரசூல். (30)

நௌஷேர் வான்மஹலில் நாட்டும்பனி ரண்டுமினுர்
தவரா துடையவந்த தாஹா நபிஇறசூல். (31)

---

* மூடத்தனம் மிகுத்த தென்றறிக.

ஆயிர மாண்டாக அவியா தெறிந்தபாரீஸ்
தீயைத் தணிக்கவந்த திவ்ய நபிஇரசூல். (32)

மாய்க ணிபுலீசன் மாபாவி சிம்மாதனம்
சாய்ந்து முறியவந்த சாகான் நபிஇரசூல். (33)

ஓடியே இப்லீசு உயர்மலையிற் றன்தலையில்
வாடிமண் கொட்டிக்கொள்ள வந்த நபிஇரசூல். (34)

அஹ்மது என்றும்வானோர் அவர்தாதா முஹம்ம தென்றும்
றஹ்மத்துன் லில்ஆல மீன்என் றழைக்கும்ரசூல். (35)

இன்பாய் மக்கீகள்அமீன் என்றுலகத் தார்கள்ரசூல்
தென்பாய்பெய ரிட்டழைக்க தீன்நிலைக்க வந்தரசூல். (36)

நாயகர் நபியுல்லா நஅத்துச்சில முன்கூறி
நேயப் புதினம்பல நிகழ்த்த வறிந்துணர்வீர். (36)

முஅஜி ஸாக்கள்.

—:o:—

நாலடித்தரவு கோச்சகக் கலிப்பா.

சீராகும் நேர்மைகளை சீர்தூக்கா மல்அகன்று
மாராகும் மானிடர்க்கு மாரிகொட்டும் வாறதுபோல்
நேரா மமிர்தமொழி நிகழ்த்திதீன் பயிரேற்றுங்
காரார்க் கவிகையிடும் ஹாமிதிர சூல்நபியே. (1)

அரபிக ளிலெங்கு மழிச்சாட்டி யம்மிகுத்து
சரச ரிஸாலத்துதீன் சரிநீத மில்லாதிடர்
பறவி யதைப்போக்கிப் பாங்குப்பெற அற்புதமாய்
கரத்தால் மதியழைத்த ஹாமிதிர சூல்நபியே. (2)

உயரா முயர்தருவு உற்றப்பணர் வேருடனே
அயரா தசைந் தசைந்து அன்பும் பிறியத்துடன்

சயராக வந்துசலாம் சாற்றி ஷஹா தத்தோத
கைராக காட்டுமெங்கள் ஹாமிர சூல்நபியே. (3)

துற்குண முள்ளஜஹல் துய்தாய் பெருமகனார்
கற்பாரை நீந்திவரக் காட்டக்கேட்ட வாறதுபோல்
அற்புத மாயழைக்க அதைக்கண்ட இக்ரிமா
கற்காய் தீன்பற்றச்செய்த ஹாமிதிர சூல்நபியே. (4)

எழுதப் படிக்கத் தெரியா எல்லாபாஷை யிலும் பேசல்

தோங்கல்.

எழுதபடிக்கவுந் தெரிந்திடாத ஏற்றமாகிய எம்பிரசூல்
பழுது களைக்கண்டா லவரவர்கள் பண்பாய் பேசிடும் பாஷைக் கொண்டு, முழுதும்பேசியே அவரவர்க்கு முன்னோனேவலை யுபதேசித்து, இழுவாஞ் செயல்களை யகற்றித்தள்ளி ஏற்றதீனதை கற்பிப்பார்கள். (5)

வேர்வை நீரை ஆயிஷாரலி முத்தாகக் கண்டது.

சொன்னார் ஆயிஷா நபிதூங்கயில் சொர்ண மேனியில் வேர்க்கும் நீரை, என்றன் கரத்திலே வழித்ததனை இறக்கி சீஷாவி லடைத்து வைத்து, பின்மருநாளை முத்தாகவே பிறிய மாய்பார்த்து நபியை கேட்க, என்றன் பீபியே ஆயிஷாவே யான்முத்தாம்நபீ அலவோ என்றார். (6)

பூமியில் கைவைத்தெடுக்க பொன்குமியல் எழும்பல்.

தோங்கல்.

ஹக்கன்நபியிட மொருநாளையில் அபூஜஹல்கூட்டம் வந்துரைப்பார், மிக்கமுப்லிஸே முஹம்மதரே மேன்மை நம்முன்னோர் நடக்கைப்பற்றும், தக்க முதலீவோம் தொழிலுக்கென்க தரையில்நபி கையை வைத்தெடுக்க, ஹக்கா மொருஜாணு முழமுயர்பொன் ஆக காபிர்கள் வெட்கிசென்றார். (7)

கல்லில் கஜூர் மரமுளைத்து கனிகள் சொரிதல்.

வல்லோன் நபியிட மொருநாளையில் வம்ப னபூஜஹல் வந்துநின்றிக் கல்லிலே கஜூர் மரமுளைத்துக் கனிகள் குலுங்கவே காட்டுமென்க நல்லார் நபியுல்லா யவன்கேட்டபோல் நாயன் கிருபையால் காட்டக் கண்டோன், வல்ல ஜாதூகர் உம்மைப்போல வகையாய் காண்கிலே னென்று சென்றான். (8)

கண்ணி ராகம்.

கல்லில் மரமுளைத்து கஜூர் குலைக்குலுங்க
நவ்விதங் காட்டும்நபீ நாயகரா மெம்மிரசூல். (9)

பூவிதழ்களில் கலிமா எழுதிஇருக்கக் காட்டல்.

தோங்கல்.

மலரா மலர்மொக்கை கையில்வைத்து மடைய னபூஜஹல் நபியிடத் தில், நலமா யென்கையில் என்னவென்க நபியப் போபூர்க்கா மலர தென்க, மலரவுமதின் இதழ்களிலே மவுலுங் கலிமாவைக் காட்டு மென்க, நலமாய் நபிகாட்ட சூனியக்கார் காட்டி லும்மைபோலில்லை என்றான். (10)

கண்ணி ராகம்.

பூவித ளில்கலிமா பூஜஹல் காண்பதற்கு
நாவின் சொல்லாற் காட்டும் நாயகரா மெம்மிரசூல். (11)

அபூஜஹல் கையில் வைத்திருந்த கல் கலிமா ஓதல்.

தோங்கல்.

கையில் கற்களைப் பதுக்கிஜஹல் கருணை நபிமுன்னம் வந்துநின்று மெய்யா என்கையி லிருப்பதென்ன என்க நபிசொன்னா ருன்கா திலே

கையை வைத்.துகேள் சொல்லுமென்க கசடன் கேழ்க்ககல் கலிமா ஓத, செய்யும் சூனியங் கெட்டிஎன்று சினந்து கற்களை எறிந்து சென்றான். (12)

கண்ணி ராகம்.

கையில் அபூஜஹல் கருதிவைத்தக் கல்கலிமா
அயிதமா யோதச்செய்த அஹ்மத் நபிஇரசூல். (13)

ஈசாநபீ காலத்தின் மையித்தை எழுப்பிப் பேசல்.

தோங்கல்.

ஆசாரம்மிகப் பேசிஜஹல் ஹக்கன்நபியிட மொருநாளையில் ஓசாரம்பேசி முன்னபிகள் உயர்த்திப் பேசும்போ லொருசவந்தை கூசாதெழுப்பியே பேசுமென்க கோமான் நபிக்கவன் காட்டும்கபர் ஈசா நாள்மைய்யத் தெழுப்பிபேச இதுவோர் பெறும்லிஹு ரேன்று சென்றான். (14)

கண்ணி ராகம்.

ஈசாநாள் மைய்யத்தை எழுப்பிபேச ஜஹல்கேட்க
கூசா தெழுப்பிப்பேசும் கோமான் நபிஇரசூல். (15)

வேங்கைத் தின்ற தாயும்பிள்ளையும் வெளியாகல்.

தொங்கல்.

அன்பும் பிறியமா யொருயஹூதி அழைக்க நபிதமை விறுந்துக் காக, நன்று அலியுடன் போம்வழியில் நலிந்தப் பசியுள்ள வேங்கை யொன்று, இன்பாய் நபிதம்மைக் கண்டெங்குதா மேகின் றீரென்க விறுந்துக்கென்க, தென்பாய் பசியார யானும்வாரேன் திறத்தப் பசியாளி யானென்றதே. (16)

அந்த மொழிகேட்டு நல்லதென்று அழைத்து போய்வேங்கை விருந்தாளியை, பந்தமாய்வாசற் படியில்விட்டு படைத்தோனபியுடன் அலியுமுட்போய், விந்தை விருந்துண்ணும் சுபுறுவிலே வேண்டும் பலவகை உணவுவைத்தே, சிந்தை மகிழ்ந்துண்ண யஹூதிசொல்ல செப்பினூர்நபி என் *மிஃறமான். (17)

உறத்தப் பசியாளர் தலைவாயலிர் உற்றோர்க் குணவேதுங் கொடுமினென்க, திறத்த சொல்கேட்டோர் மனைபுகுந்து தேடியுந்திண்டி ஏதுமில்லா, கறக்கத் தாலேதன் மனைவியையும் காதலன்றனை யழைத்தவாளை, பறக்கத் தாம்நபி விருந்தாளிக்கிப் பாரவேங்கையின் பசியாற்றினூர். (18)

பின்புபசியாற யஹூதிசொல்ல பெரியோன் நபியஹூதிக்கிசொல்வார், அன்புள்ளஉந்தன் மனைமக்களை அழையுங் காளெல்லா முண்போமென்க, துன்பசெய்திமை யுரைத்தால்நபி துய்யவிருந்துண்ண மாட்டாரென்று, அன்பாய் சபபுகள் சொல்லியுண்ணும் யாங்களுண்கிறோம் பின்னரென்றூர், (19)

பலபலவித ஹீலாக்களை பகர்ந்தும்நபிகோளா வழைக்க கேட்க நலமாம் வேங்கைக்கி விருந்துசெய்த நட்பைவிபரமா யஹூதி சொல்லக், கலங்கி நபியவாள் பெயரைக்கேட்டுக் கழரினூர்புலி வாயிற் சென்ற, தலம்விட் டிப்பவே இருவர்வா தனியோனேசெய்வா யென வேண்டினூர். (20)

அந்தக்ஷணத்திலே தாயும்பிள்ளை அடவாய் வரக்கூட்டி விருந்து உண்டு, கந்தங் கமழ்நபி மகிமையாயந்து கலிமாதஷஹ்ஹாதை யஹூதிஓதி, பந்தமுளநபி மார்க்கத்திலே பட்சமுடனூன அற்புதத்தின், விந்தை யையெல்லா முஸ்லிங்களும் விருப்பமுடனுய்ந்து அறிந்துணர்வீர். (21)

* மிஃறமான் என்பது, விருந்தாளி என்றறிக.

கண்ணி ராகம்.

அரிவை யுடன்பிள்ளையை அறந்தும் வேங்கை நின்றும்வர
தெரிந்த யகூதியினை தீனில் அழைத்தரசூல். (22)

கல்லில் ஸமர்ஜத்மரம் கனிகள் நவரத்தின மாகல்.

தோங்கல்.

வன்னெஞ் சன்ஜஹல் கூட்டத்துடன் வந்தோர் நாளையில் நபியிடத்தில், சொன்னான் ஓய்அப்துல் லாமகனே சொல்லும்உம்நாய னுண்மையானால் இன்னகற்பாரை நடுவிலேயோர் எற்றஜமர்ஜதால் மரமுண்டாகி, பொன்வெள்ளிஇலை யதின்கனிகள் போற்றும் ஜவாஹிருத் தால்சொரிந்தே. (23)

அந்தமரத்தினோர் நடுகொப்புமேல் அழகா மொருபுரு இருந்தநாவால், பந்தமுடனீங்கள் பகர்கலிமா பட்சமுடன்சொன்னால் நாமுஞ்சொல்லி, உந்தன் தீனிலே யாவோமென்க உடையோனிடம்நபி மன்றுடியே, அந்த மாய்காட்ட சூனியத்தில் யாருமிலையும்போலென்று சென்றான். (24)

ஜஹலிட முள்ள அமானிதத்தை நசாருவுக்கு மீட்டல்.

தோங்கல்.

சங்கை நபியுல்லா தங்களிடம் சருகா நஸ்ரானி யொருவன்வந்து பஙக னபூஜஹல் பாவியிடம் பணமா யிரந்தீனு ரெனதுஉண்டும் அங்க முடன்கேட்டால் கொடுக்காமலே அடித்துமநியாய மெனை செய்வதால், தங்க ளதைவாங்கித் தருகவேணுந் தயவுஎன்பேரில் செய்யுமென்றான். (25)

அந்த நேரமே நபியும்போக ஆயுத்தமாக அல்வேளையில்
சிந்தைக் கலங்கியே குதைஜாறலீ செப்பினார்தங்கள் பகைவனிடம்
இந்த இரவிலே நாயகமே எகா தீரென்றுந் தடுத்துங்கேளா, விந்தை
யுடன்நபீ நஸருவுடன் வெளிப்படும்வேளை நடப்பைக்கேளீர். (26)

அந்தநேரத்தில் அபூஜஹலும் அவனைச்சார்ந்தோரும் சூழ்ந்துக் கொண்டு, நிந்தனை நம்மசாமிகட்கு நேர்பாற் றஞ்செய்யு முஹம் மதையாம், எந்தவிதமாகக் கொல்லவேண்டும் இதற்குபாயங்கள் செய்யுமென்று, சிந்தைமகிழ்ந்தபூ ஜஹலின்வீட்டில் சேர்ந்துபேசிக் கொண் டிருக்கும்போது. (27)

வல்லோன் நபியுல்லா நசருவுடன் வந்தார்அபுஜஹல் கூட்டத்திடம் தொல்லைக் கூட்டத்தோர் கண்டவுடன் துணிந்தார் நபிதமை கொல் வதற்கு, பொல்லா னபூஜஹல் கூட்டத்தோர்க்குப் புகன்றன் நம்நா டல் நான்முடிப்பேன், செல்லுங் காளென்க அவர்கள்போக சேர்ந்த ஜஹல்கூட்டம் கலைந்திட்டதே. (28)

அப்போ தபூஜஹல் மனைப்புகுந்து அடங்கா பிறியமாய் சந்தோஷ மாய், தப்பா தாயுதம் பதினெட்டையும் தாட்டி யாகவே யணிந்துக் கொண்டு, ஒப்ப முடனவன் மனையாள்மெய்க்க உயர்வாம் பெருமை யாய் சீறிக்கொண்டு, மெப்பா கவந்தோன் நபியைக்கண்டு மிக்கக் கல க்கமா யந்நேரமே. (29)

பங்க னபூஜஹல் விரிப்புப்பல பாங்காய்விரித்ததில் மறுங்காகவே சங்கைநபிதமை இருக்கச்செய்து சறுகா நின்றவன் தலையைதாழ்த்தி எங்கள் முஹம்மதே நவமணியே ஏழை வீட்டைஏன் தேடிவந்தீர் தங்க ளழைப்பித்தால் வந்திருப்பேன் தாழ்மை யிடம்வந்த தேதுக் கென்றன். (30)

அப்போ நபிகேட்டார் நசறுனியின் அமானத் தும்மிட முண்டோ வென்க, செப்பி னன்தீனர் ஓராயிரம் செய்யமானிதம் உண்டு வென்க, ஒப்பமுடனபீ அதைக்கொடென்க உடனே மனைவியை கொடுக்கச்செய்து, அப்பவே தறமுதலைப்பெற்ற அந்த நசுறுனி ஆலோஜித்தே. (31)

இந்தப் பாதகன் அபூஜஹலை எவ்வாறுகேட்டுங் கொடுத்தானில்லை நிந்தனைஇவன் செய்யும்நபீ நேர்மை யொருசொல்லா லீந்தா

னென்று, சிந்தை மகிழ்வுற்றே தீனிலாகி சிறந்த தௌஹீது கலிமா ஓதி, விந்தை நபியுடன் போனபின்னர் வீணன் அபூஜஹல் மனைவி யப்போ. (32)

கேட்டாள் எஜமானே மூன்றுநாளாய் கிருபை முஹம்மதைக் கொல்வ தற்கு, கூட்டம் நாள்களுந் தவராமலே கூடிபேசிய தேதுக்காச்சு, நாட்ட மும தெல்லா மெங்கேபோச்சு நம்தலம்வந்தப் பகையவரை தாட்டி யாயானும் சிதைப்பேனென்ற தைறியமெங்கே போன தென்றும். (33)

புலிபோல் சீறியே போனதேது பூனைப்போலவே பதுங்கலேது வலிமைப் பேசியே நசறுசொத்தை வம்புசெய்துபின் கொடுத்த தேது, நலிவா யிருந்ததின் சபபேதென்க நவின்று னபூஜஹல் மனை வியுடன், வலிமைக் குறைந்துயா னின்றதாலே வந்தே னுன்முகங் கண்டே னென்றும். (34)

அவர்கள் சொல்லுமோர் ஆதியுண்மை அன்பா மவர்களின் மார்க்க முண்மை, அவர்கள் திருத்தூத ரென்பதுண்மை அவர்காட் டுமொவ் வோர் புதினமுண்மை, அவர்க்கு நானின்றை மறுங்குசெய்யு மந்தக் காரணம் சொல்கிறேன்கேள், அவர்க ளிருதோளின் புயத்தில்ரண்டு அறுப தடிவேங்கை வாய்த்திறந்தே. (35)

என்னை சீறியே கிழிக்குமாப்போல் எதிர்த்து நின்றதால் பயந்தே னென்றுன், அன்ன மயிலாளுங் கேட்டாளப்போ அவரைத் தர்க்க மேன் செய்புகின்றீர், மன்னர் நபிதீனைப் பற்றுமென்க மக்கா நாடெங் கும் பிரபல்யமாய், நன்று மதிப்புடன் பெற்றப்பேரை நானேயழிப் பது நாணமென்றுன். (36)

தோங்கல்.

அன்ப ரேநபிநாயகர்தம் அன்பாந் துணைக்காக ஹக்த ஆலா
நன்று வலபாலில் ஜிப்ரயீலும் நலமா ரிடபாலில் மீக்காயீலும்

கன்நெஞ் சன்ஜஹல் காண்பதற்கு கடியவேங்கைப்போல் வந்த தென்று, இன்பாய்ருவீகள் சொல்லுகின்ருர் ;ஏற்றநபிதங்கள்மகி மைப்பாரீர். (37)

கண்ணிராகம்.

பணமாயி ரந்தீனுர் பதுக்கும்ஜஹ விடம்வாங்கி
இணக்கமா யஹூதியிட மீந்த நபிஇரசூல். (38)

படுகுழி தோண்டி தானேபதிந்த ஜஹலை எடுத்தல்.

தோங்கல்.

படைத்தோன் நபிதமைக் கொல்வதற்கு படுகுழிதோண்டி மூடி ஜஹல், மடையன் சீக்கென்று நபிக்காள்விட்டு மறுங்கா யழைத் தவன் சொல்லைநம்பி, தடையன் றியவன்வாயல்வர தகுமாயுட்புகா திரும்பும்படி, உடையோன் ஜிப்ராயீலுரைக்க கேட்டு உடனே நபி யுல்லா திரும்பும்போது. (39)

மனது கலங்கியே மடையன்ஜஹல் மடக்கி நபிதமை குழியில்தள்ள சினந்து ஓடயில் படுகுழியில் சீரற்ற ஜஹல் விழுந்துவிடக், கனத்த குழிவிட்டும் வெளிபடுத்த கயிற்ருலுமற்று மெதிலுமேலா, பினத்தி யேவம்பன் பெறும்பள்ளத்தில் பிலத்தக் கலக்கமாய் புலம்பலுற் ருன். (40)

என்னை வெளியாக்க வேண்டுமானல் என்அண்ணன்மகன் முஹம் மதலலாமல், ஒன்றுளவாலு முடிந்திடாது நலமா யழையுங்க ளவரை யென்க, துன்பச் செய்திகேட் டுடனேநபீ துரிதமாய்வர துட்டன் ஜஹல், என்னை வெளியாக்கும் முஹம்மதரே யானுங்கள் சொல்லைக் கேட்டேனென்ருன். (41)

எட்டா வாழத்தி லுள்ளவனை இறையோன் றிருத்தூத ரிடக்கை விட்டு, முட்டா ளவன்காதை பிடித்தெடுத்து மோட்டில்போடகண் டப்பாதகன், பட்டாங் குப்பேசி பாதாளத்தில் பாங்காய் கைவிட்டு

எனைஎடுத்த, திட்டாந் தறமான உமதுஸிஹர் திறமெனச்சொல்லி மனைப் புகுந்தான். (42)

கண்ணி ராகம்.

படைத்தோன் நபியைதள்ளப் படுகுழி தோண்டும் ஜஹல்
மடையன் விழஎடுத்த மக்க நபிஇரசூல். (43)

கஜூர் கொட்டையில் பாலுந்தேனும் சிந்தல்.

கடினப் பசியுள்ள மிஸ்கீனுக்கு கஜூர் வித்தென்றை நபியளிக்க வடிவாம் வித்ததி னிருபுறமும் வண்மை யுடன்பாலுந் தேனுஞ்சிந்த மிடியா ளர்மனை மக்களுடன் மிகுத்தப் பசிதீர்த்து பிஸ்மில்சொல்லி திடமாய் வைத்ததை மருநாள்பார்க்க திறத்தமாணிக்கமாகக் கண்டார். (44)

ஒருநூரு கஜூருக்கு தோட்டமெல்லாம் நீர் பாச்சல்.

—உ—

ஒருநூற் *குர்மாவை கூலிபேசி உடையோன் நபியொரு தோட்டமெல்லாம், சருகா மற்றண்ணீர் பாயச்செய்து சங்கை தோழமாருடனேஉண்டு, இருந்ததுமிச்சம் குர்மா நூறு இதையந்த தோட்டமாலிக்கிடம், அருமை யாய்வாபீஸ் செய்துநபீ அன்பாய் தோழர்களோடுசென்றூர். (45)

ஜாபிர்ரலி மகன் கடனை எளிதில் தீர்க்கச் செயதல்.

சொன்னூர் ஜாபிர் எனதுதந்தை ஜங்கே உஹுதில்செய் வசிய்யத்து போல் முன்யஹூதியின் கடனைதீர்க்க முழுதோட் டம்கஜூர் கொடுக்கவேண்டான், நன்றுசெய்தியை நபிகேட்டதும் நலத்த கஜூரில் கைத்தொட்டிய, பின்பிடைசெய்யக் கடனுக்குமேல் பேரீத் தம் பழம் மிகுத்ததென்றூர். (46)

*குர்மா என்பது, கஜூர் அல்லது, பேரீத்தம்பழம் என்றறிக.

எடுக்க எடுக்க தவசம் குறையாதது.

மன்னர் நபியுல்லா மனைஆயிஷா மனையில் நபிநாளி லொருசட்டியில் நன்று கோதும்பை இருந்ததுவை நான்செலவிடக் குறைவதில்லை பின்சிலகாலம் சென்றதும்யான் பிறியத்துடன்கொட்டி அளந்து பார்க்க, அன்பாய் நான்கண்ட அளவுக்குமேல் ஆகாவெறுஞ்சட்டி யானதென்றூர், (47)

ஹிருமலை பொதும்பில் காட்டின அற்புதம்.

—ஓ—

ஸித்தீக் அக்பர்ஹி ருபொதும்பில் செப்பி ஞர்ஹக்கன் றிருத்தா தரோ, ஹுத்தன்ஜஹல்கூட்டம் வந்தாலிங்கே துணிப்பார் சிதைப் பாரே என்கநபீ, மெத்தவலமிடம் புயங்கள்தூக்க மேவுங்கடலேழு மிஷ்டீம்பரும்,நற்றவநபீ காட்டிச் சொன்னூர் நாமேறிச் செல்வோம் பயப்படாதீர். (48)

நன்று நாயகர் நபிஇரசூல் நலத்த முஅஜிஸா பலதிற்சில, அன்பா யுரைத்ததா லதிகஞ்சொல்ல அருளும்நூல்சிறி திடந்தாராதால், மன்னர் உமர்ரலீ நடக்கைநீதம்மவுல நம்தீனின் மறுங்கறியா,தென் பாய் வாணூளை வீணிலாக்கும் தீனின்பிறவிகா ளறிந்துணர்வீர். ()

முஅஜி ஸாக்கள் முற்றுப் பெற்றது.

அதாலத்தே உமர் பாறூக்.

தோங்கல்.

நாயகர் உமர் நடக்கைகளும் நாட்டமுமவர் நீதங்களும், மாய துனியாவில் தலமைக்காரர் மற்றோர்களு மாய்ந்து அமல்கள் செய்து, தாயமாகவே வெற்றிப்பெற்று தகுமாய்சொர்க்கத்தில் வசிப்பதற்கு; நேயமுடன் நாடி உமர்ரலிதம் நேர்மை யவர்நீதம் நிகழ்த்தக்கேளீர்.

உமரு நாயகர் மகிமைகளை உரைத்துஎன்னதான் விபறிக்கலாம் தமதுஏவலால் மண்ணுங்காற்றும் தண்ணீர் நெருப்பிந்த படைப்பு நான்கின், சமத்தை வெல்லவே எவருமில்லை சங்கை உமர்ரலி இவைகளின்மேல், அமதியுடன்மிகைப் பானசெய்தி அருளவசனமாய் கேட்பீர்களே. (2)

மண், தண்ணீர், காற்று, நெருப்பு, இந்த நான்கின் பேரில் மிகைப்பானது.

வசனம்.

அன்பர்களே! உமர்ரலியல் லாஹு அன்ஹு அவர்கள் தமது மகிமைகளை என்னதான் சொல்லலாம், அவர்கள்நீதத்தால், மண், காற்று, தண்ணீர், நெருப்பு, இந்நான்கும் அவர்களின் ஏவலுக்கு வழிபட்டது. இந்தநான்கைக்கொண்டே ஜீவராசிகள் ஜீவிப்புநடக்கிறது. இந்தநான்கைவெல்ல உலகத்தி லொருவருமில்லை. இந்நான்குக்கு எல்லாமே ஆஜிஸ், இந்நான்கு மெல்லாவஸ்துக்களின்பேரில் *காலிப், இந்நான்கு மில்லாவிட்டால் மனிதன்ஜீவிப்பது கஷ்டம். இந்தநான்கின் பேரிலும்உமர்ரலி மிகைப்பானார்கள்:—

---

*காலிப் என்பது, மிகைப்பு என்றறிக.

1-வது மண், உமருநாயகர் மஸ்ஜிதே நபவியிலிருக்கயில் பூமி ஸல்ஸலாவென்னும் அதர்ச்சையுண்டாக மதீனு ஜனங்களெல்லாம் கலக்கமா யிருக்கயில் உமருநாயகர் அஸாவை பூமியிலூன்றி ஐஸமீன் உன்பேரிலொரு நீதவான்தரிபட் டிருக்க நீ ஸல்ஸலா வாகலாமோ, இதுவோ உமருடைய ருஜாங்கமா இருக்கிறதென்றுசொல்ல உடனே பூமி அதற்சைநின்றது. அதுமுத லிதுவரையில் பல்கே, உலகமழியும்வரையில் மதீனத்தின் பூமியில் ஸல்ஸலாவே கிடையாது.

கண்ணி ராகம்.

மதீனு நகரெங்கும் மண்ணதிர்ச்சை யாகஉமர்
நீதிஅஸா நாட்டபூமி நிலையாக நின்றதுவே. (1)

2-வது தண்ணீர், நீலாற்றில் தண்ணீரில்லாமல் காய்ந்து வறண்டுபோக மிஸர்கேளர்னர் அமரிப்னஆஸ்(ரலி) அவர்களுக்கு உமர்நாயகர் சீட்டனுப்ப நீலாற்றில்போட நீலார் தண்ணீர்பொங்கி கியாமநாள் வரையில் வற்றுமல் ஜாரியாய் ஓடிக்கொண்டே இருக்கிறது.

கண்ணி ராகம்.

மங்கைப் பலரைபெற்று மணஉளற்று தாரும்நீலார்
சங்கைஉமர் சீட்டனுப்ப சதாநீர் பெறுகினதே. (2)

3-வது காறறு, ஸாரிஅ(ரலி அவர்கள் குப்பார்கள்பேரில் *ஜங்கு செய்ய அப்ஸராகபடையுடன் போயிருக்கயில் எதிரிகள் மலையின் பேரிலிருந்து அட்டூழியமாக கல்கலெறிய ஸாரிஅ(ரலி) படைகள் மலைஅடியில் பரிதாப நிலமையிலிருக்கயில் எதிரிகளின் சேனைகள் பின்புறமாக மலையைவிட்டி மிறங்கயில், மஸ்ஜிதேநபவியில் உமர்நாயகர்குத்பாஓதயில் யா, ஸாரிஅத்துல்ஜபல் என்று இரண்டு விடுத்தம் ஓத, அவ்வாசகத்தை ஸாரிஅ(ரலி) காதில்உடனே காற்றுக்கொண்டு சேர்க்க ஸாரிஅ(ரலி) மலைபுறம் திரும்பிப் பார்க்கயில் எதிரிகளின் படைகள் மலைஅடியில்நின்றும் பின்புறமாக தொடர்வதைக் கண்டு போர்புறிந்து ஸாரிஅ(ரலி) வெற்றிப்பெற்று எதிரிகள் தோல்வியடைந்தார்கள்.

*ஜங்கு செய்ய என்பது, போர் செய்ய என்றறிக.

கண்ணி ராகம்.

ஸாரிஅ றலிதமக்கு சங்கைஉமர் சேதிசொல்ல
வாரிபோல் காற்றுக்கொண்டு வண்மையுடன் சேர்த்ததுவே. (3)

4-வது நெருப்பு, மதீனவைச்சார்ந்த பட்டிக்காட்டில் வசிப்பவர் குடிசைகளை கொளுத்த வருடந்தோறும் காட்டில்வசிக்கும் பதவிகள், நெருப்புமூட்ட ஜனங்கள் ஓடிப்போகயில், சொத்துக்களை கொள்ளையடிக்கின்ற வளமையால் நெருப்பின்இடரை மதீனத்தார்கள் கலீபாஅவர்களிடம் முறைசொல்ல உமர்நாயகர் தலைப்பாகையை யொருசஹாபி வசங்கொடுத்து இதைக்காட்டில் கொண்டுபோய் விறுதது பிடித்துக்கொண்டு ஐநெருப்பே நீமதீனவில் உன்னுடைய கொடுமையைக் காட்டுவதும் உன்னுடையசுடர்வீடுகள் குடிசைகளில் தாக்குவதும் கூடாது. இது உமர்உடைய இராஜாங்க மென்றறிந்துக் கொள், நெருப்பே என்றறிவிக்கஅனுப்ப, அதுபோல் சஹாபியவர்கள் சொல்ல அன்றுமுதலிதுவரையில் (பல்கே) கியாமத்து வருமளவும், மதீனவில் நெருப்பால் வீடுகளுக்கு ஆபத்துக் கிடையாது.

கண்ணி ராகம்.

நெருப்பின் அமளிநீங்க நேர்மதீன அரசர்உமர்
அருமைப் பாகையனுப்ப அக்கினி யகன்றதுவே (4)

உமர்றலியல்லாஹு அன்ஹு அவர்களின் கிலாபத்து.

தோங்கல்.

புலியுமானுமா யொருதுறையில் பொறுத்த மாய்நின்று *புனல்பருகச், சலியாததைகண்ட காட்டிடையர் சங்கை நீதவான் பட்டம் பெற்ற, வலியனாளென்றே எழுதியவாள் வைத்தே மதீனத்தார் வருகவேகட்க, நலிவிலாதீனி னரசர்உமர் நற்பட்டம்பெற்ற நாளதென்றார். (5)

* புனல் என்பது, தண்ணீர் என்றறிக.

கண்ணிராகம்.

நீதவான் பட்டம்பெற்ற நாளென்றே காட்டிடையர்
நீதஉமர் செங்கோலை நேர்மையுடன் சொன்னூரே. (6)

உமருநாயகர் செங்கோலது உலகத்தில் சைனு தேசம்வரை *கமர் போ லிலங்கிடும் வாழ்வைக்கொண்டு களித்துமனதிலே சந்தோஷ மாய், பவரும் பெருமையா யிருந்ததில்லை படைத்த நாயனை மறந்த தில்லை, எவரும்பார்க்கவே ஏழையைப்போல் இந்தஉலகினில் வசித் தார்களே. (7)

ஜுமஆவுக்கு கால்மணி பின்வந்த சபபு சொன்னது.

ஒருநாள் ஜுமஆவில் கால்மணிபின் உமருநாயகர் பள்ளிவந்து அருளி னூர்ஜமா அத்தைப் பார்த்து அணிந்த என்சட்டை தைப்ப தற்கு, ஒருகால் மணிபிந்தி வந்தேனல்லால் உற்றப் பெருமையா லல்லவென்று, சருகா துரைத்தனர் மூமின்களை சங்கை உமர்குண முற்றுப்பாரீர். (8)

அந்தச் சட்டையில் போட்டஒட்டை ஹால ரீன்சில ருற்றுபார்க்க பந்தமுளப்பல வர்ணமுள்ள பதினுன்கொட்டுகள் போடக்கண்டு, சிந்தை யுறுகியே கலக்கமாகி செப்பி னூரிதை தீனோர்கட்கு; இந்த குணத்தையா மேன்றமட்டில் எடுத்தா லீடேற்றம்பெறலாகுமே.

வாரத்துக் கொருநாள் நப்சின்பேரில் கணக்கு வாங்கல்

நாளும் செய்திடும் நலம்பொலத்தை நலமாய் தாளிலே எழுதிஉமர் ஏழுக்கொருநாளை ஜும்ஆவின் † அல் எழுதும் தாளதை படிக்க யிலே, வாழும் நலங்கண்டால் சந்தோஷமும் வரைந்த தில்தின்மை யாகில்நொந்து, நீள ஜாட்டையால் முதுகில் வாட்டி நீத மாய்நப்ஸை தண்டிப்பாரே. (10)

---

* கமர் என்பது, சந்திரன் என்றறிக.

† அல் என்பது, இரவு என்றறிக.

தண்ணீர் கலப்பில்லா பால்வாங்கி விற்றது.

எங்கும் பாலில்நீர் விட்டுவிர்க்க இறையோனதைத்தொட்டுங் கேட்பானென்று, சங்கை யாகிய அரசர்உமர் சருகா பால்வாங்கி குடத்திலூற்றி, பங்கமென்றெண்ணு வீதிகளில் பால்வாங்கும்உமர் தரும்பாலென்று, தங்கள் பால்விற்ற அடயாளத்தை தலையிற்றோழமார் கண்டார்களே. (11)

பீபி ஹப்ஸாரலி கேள்விக்கி பதில்சொன்னது.

குத்துபா இராகம்.

உமர்ரலியல் லாஹு அன்ஹு தம்கிலாபத்து நாளையில்
உமர்மகளார் பீபீஹப்ஸா கேட்டனர்ஒரு வேளையில். (12)

அருமைஎந்தன் தந்தையேஐ பாதுஷாவே தாங்களும்
அமீருல்மூமி னுயிருக்க அணிந்ததமது சட்டையில். (13)

ஒட்டுகள்பல திட்டுக்கொண்டு உணவுநல்றுசி யுண்டிடா
ஒருஹகீர்ப கீர்மிஸ்கீன் போலகாலம் எழுமையில். (14)

இருப்பதேனோ நல்லவிதமா யுண்டுடுத்தும் தேளலத்தில்
என்றுமகளார் கேட்கபதிலைப் பகருவா ரப்போதயில். (15)

என்மகளே உமதுபுருஷர் எமக்குஹாதீ யானவர்
இறையவன்திரு தூதர்நபீ அலைஹிவாழும் நாளையில். (16)

எந்தவிதமா யுண்டுடுத்தார் எற்றப்புருஷர் நடக்கைகள்
எல்லாமுனக்கு தெரிந்திருக்கு மெனக்கதைசொல் லென்றதில். ()

அப்போது பீபி ஹப்ஸாஅழுது எனதுபுருஷ நாயகர்
அறுந்தவில்லை வயர்நிறம்ப அடுத்துமூன்று அல்பகல். (18)

இன்னுமனந்தம் நாள்கழிந்தது அடுப்பில்நெருப்புப் புகைந்திடா
இருந்தனம்யா மவர்களுடனே பசியுடன்பல நாளையில். (19)

இன்னும்நாயகர் உடுத்துமுடையில் எழுமைய்யுடையை உடுத்தியும்
எற்றபிறியம் தைத்துமொட்டு மிட்டதுடுப்பாய் மேனியில். (20)

என்றுசொல்லக் கேட்டவுடனே தந்தைமகளுமிருவரும்
எங்கிதுக்கித் தழுதுரைப்பார் மகளுக்குஅப் போதயில். (21)

ஐமகளே நமக்குசர்தார் ஹக்கன்மஹ்பூப் நாயகம்
அவ்வாறிருந்தால் நாமுமப்படி அவனியில்வாழ் நாளையில். (22)

இருந்திடில்தா னவர்களையா மின்புடன்சந் திக்கலாம்
இன்னுமானந் தங்கள்பெறலா மாகிரத்தின் நாளையில். (23)

உலகசம்பத் தாலேமறந்து நப்ஸினிச்சைத் துயர்ந்திடில்
உண்மைஆகிர் அழியாசம்பத் கிடைத்திடாதே பதியினில். (24)

என்றுசொல்லி யழுதுக்கொண்டு இந்தஉலக தவ்லத்து
எனக்குவேண்டாம் நமக்கு எழுமை போதுமென்று ருலகினில். (25)

குத்பாஓதயில் நாட்டரபி ஜுப்பாவைப்பற்றிய தர்க்கம்.

தோங்கல்.

முல்கேஷாம்கனீம் சொத்துக்களை முறைபோலபாகம் செய்ததிலே
நல்ஜுப்பாதைத்து மணிந்துஉமர் நாயகர்குத்பா ஓதும்போது
கல்நெஞ் சன்காட்டு மனிதனொத்தன் கழரினன்மூமி னோர்க்கரசே
நல்கலீபாவு மாதிலுமாய் நாயகரான தங்கள்ஹாவில். (26)

எங்கள் ஜுப்பாவைக் காணட்டம் இருக்குதேஜுப்பா தமதாளன்
றம், தங்கள்மட்டிலும் நீதமில்லா துகிலைய திகமா யெடுத்தீரென்க
சங்கை உமர்சொன்னார் சந்தோஷமாய் சார்ந்தகேள்விக்கி பதி
லென்மகன், அங்கமுடன் சொல்வா ரென்ககேட்க அப்துல் லாஹலீ
அருளானுற்றார். (27)

என்பாகத் துணிவந்ததிலே எடுத்தோர்துண்டதை எனது தந்தை அன்பாயெடுத்துதன் ஜுப்பாவுடன் அமீருல்மூமினீன் தைத்தாரென்றூர், நன்னுதீன்செங்கோல் உமரவரும் நலமாரவர்மகன் அப்துல்லாவும். ஒன்றுங்குறையுரா பதிலீந்ததை உலகின்றலைவமா ருற்றுணர்வீர். (28)

ஏழையாகிய கிழவிக்கி சம்பளம் விதித்தது.

ஷாமிலிருந்துமர் வருகையிலே சஞ்சலமுள்ள முதுமூப்பியை
உமர்செய்தியாது முண்டோவென்க உமரொளிந்தவர் போகவென்க
உமக்குக் குறையாது உம்மாவென்க் உற்ற *மூப்விசை யறியா உமர்
தமக்குஎன்செங்கோ லென்ககேட்க † தன்காமூப்பியர்க் காக்கினரே.

பால்குடிக்கிற பிள்ளைக்கு சம்பளம் விதித்தது.

நன்றுஉமரல்வில் நகர்சோதிப்பில் நங்கைமகவுக்கு பாலூட்டாதால், அன்றுப்பாலக னமுகஉமர் அம்மாபால்கொடும் குழந்தைக்கென்க, பன்னும்பாலகன் பால்மறந்தால் பட்டத்தரசரால் சம்பளமாம், என்றசொல்கேட்டு உமருநொந்து ஈன்றநாளையே தன்காசெய்தார். (30)

மருத்துவம் பார்க்க மனைவியை அனுப்பினது.

இரவில்ஊர்வலம் உமர்வகயில் ஏழைமனிதனர் துயரைக்கண்டு, மறவாமனைசென்று உம்முகுல்தும் மனைவிக்கிசொன்னர் மருத்துவம் பார், உரமா யவர்பார்க்க சேயுதிக்க உரைத்தார்முபாறக்கு பாத்தருவீர், சரசமாய்தந்து மப்பிள்ளைக்கி சட்டசம்பளம் விதித்தார்களே.

பசியாளர்க்கு தவசம் விரகு சுமந்து தந்தது.

ஒருநாள்உமர்வனம் போகயிலே ஓர்வீட்டில்பாலர் பதரியழ, ஒருமாதுதண்ணீர் அடுப்பிலேற்றி உளாவிதேர்ச்சைகள் செய்யக்

* மூப்விசை என்பது. எழுமைதனத்தை என்றறிக.

† தன்காவென்பது, சம்பளம் என்றறிக.

கேட்க, அருமைஎன்னுட புருஷர்தமை அனுப்பி*ஜங்குக்கு உம ரென்பவர், வருமையால்வைத்த இழவுக்காக வாதைப் படுமெந்தன் மக்களுக்கு. (32)

தருக உணவில்லா காரணத்தால் தண்ணீரடுப்பினி லேற்றிவைத்து சருகா சமைத்தாச்சு எனதேற்சைக்கி சாற்றுரேனென்க உமர்வீடு போய், அருமையுணவுகள் மூட்டைக்கட்டி †அஸ்லம்மாரலாய் முது கிலேற்றி, தருகஅம்மாது பெற்றுக்கொண்டு தயாபரேவிர கில்லை என்ருள். (33)

அல்லில்உமர்ரலி அடவியிற்போய் அன்பாய்தேடியே விரகுசேர்த்து எல்லையுடன்தூக்கி சுமந்துவந்து எதாயேறொட்டி சுடுங்களென்க வல்லப்பசியினுல் பாலரழும் வாதையாலெவ்வார் சுடுவேனென்க நல்லதுறொட்டி தட்டும்தாயே நானெரிக்கிறே னடுப்பைஎன்ருர்.(34)

அதுபோ விருவரும் றொட்டிசுட்டு அப்பாலகருண்டு விளையாடயில் இதமாய் பாலரைபார்த்துஉமர் எற்றசந்தோஷ மடையும்போது, அதிகப்பிறியமாய் மாதுசொன்னுள் அல்லாஉமருக்கு தந்தசெங் கோல், பதியில் தமக்கீந்தால் நல்லதென்க பகர்ந்தார் நானும் உமரு என்றே. (35)

அப்போதம்மாது அழுதுகெஞ்ஜி அதிபரேஎந்தன் அதபுக்கேட்டை மெப்பாய் மன்னிக்க வேண்டுமென்க மேன்மைஉமர்ரலீ சொன்னு ரப்போ, சப்பாய் கூடும்நாள் மஹ்ஷரிலே சங்கைநபியுல்லா திருமுன் னமே, ஒப்பமாயிந்த உமர்குறையை உரைக்கொண் ணுதென்று உகந்துகேட்டார். (36)

கைபர்கோட்டை மதில்இஷாருவினுல் சரிந்தது.

ஜங்கேகீபரில் காபிர்களின் சங்கைத் தலைவானும் உமரைப்பார்த்து அங்க முடன்சொன்னுன் அரபிகளே அதிகஏழைகள் வித்தையில்லார்,

*ஜங்குக்கு என்பது, சண்டைக்கி என்றறிக.

†அஸ்லம் என்பது, அஸ்லம் என்னும் பெயருடைய குலாம் என்றறிக

எங்கள்கூட்டமோ பணமிகுத்தும் ஏற்றவித்தையில் நிறப்பமாயும், பங்கஞ்சூனிய மிகுத்தக்கூட்டம் பண்பாளதிர்த்திடா போங்களென்றான். (37)

அப்போதுஉமர் அருளலுற்றார் *அப்ஸரேகேளு மெய்மில்சிலர் ஒப்பமுடன்சில வித்தைக்காரர் உண்டுமவர்கையை நீட்டிஇவ்வார் தப்பாதுகாட்டி சரியவென்றால் தவராசரிந்துபோ மென்றுக்காட்ட மெப்பாய்க் காட்டின வரையில்கோட்டை இடியள்திரிகள் தீனிலானார்

அகதலைை போர்செய்யாமல் பத்ஹுப் பெற்றது.

மெத்தக் கிருபையு மிறக்கமுள்ள மேன்மைஉமர்ரலீ றுஜாங்கத்தில் பைத்துல்முகத்தஸ் பள்ளியதை பாரில்ஐரோப்பா கண்டத்துட மொத்தஇராஜாங்க நஸ்றுனிகள் †முஹாஸிறுசெய்துக் கொண்ட போது, யுத்தந் துடங்கவே உமர்நாயகர் உடனேபோர்ப்படை யனுப்பினரே. (39)

அந்தப் படைகள்போ யுத்தம்செய்ய அப்போதெதிற்படை தலைவர் சொல்வார், இந்தப்படைகளா லெமைஎதிர்க்க ஏலாதாகையால் மூவ்வெழுத்தின், பந்தப்பெயருள்ளோர் எம்முன்வர பண்பாய்தருவித்தால் ஜயமடைவீர், நிந்தனைக்கிதா மாளாகிடா நீங்களழையுங்காள் உம்ரைஎன்றார். (40)

அப்போதுதீனோர் அப்ஸரொல்லா மாலோஜித்உமர் மகனைக்காட்ட ஒப்பமுடனெதிற் படைத்தலைவர் உமர்தம் போட்பார்த்து இவரல்ல காண், மெய்புடன்மூன்று எழுத்தின்பெயரார் மேன்மைஉமர்தமை யழையுமென்க, செப்பக்கேட்டதும் உமரவர்க்கு சிறப்பா யாள் விட்டு வழைக்கலுற்றார். (41)

---

* அப்ஸரே என்பது, தலைவரே என்றறிக.

† முஹாஸிறு வென்பது, முற்றுகை.

அந்தச்செய்திகேட் டுடனே உமர் அங்குள்ள ஒருகிழஒட்டகம்;முந்தி
தாச்சொல்லி குலாமுடனே *முகதஸைநாடி பயணமுற்றே, அந்த
ஒட்டகந் தன்னிலேறி அடுத்தமன்ஜிலி லிறங்கிதாங்கள், சொந்ததன்
குலாம் ஒட்டகைமேல் சுணங்கா தேற்றியே தாம்நடந்தார். ()

இந்தவிதமாக மன்ஜில்களை இரண்டுபேர்களும் நடந்துமேறி, விந்தை
யாய்வர முகதஸ்மன்ஜில் வேந்தர்உமர்குலாம் ஒட்டகைமேல், அந்த
முடனேறி வருமன்ஜிலும் அரசர் உமர்நடை மன்ஜிலுமாய், வந்
தார்கள்பைத்துல் முகதஸிடம் வம்பர்நஸறுக்கள் போட்டைப்
பார்த்தே. (43)

இந்தபோட்டிலே யமைந்தரூபம் ஏழைமிஸ்கீனின் உடுப்புடுத்தி
வந்தோர்தக்வாவை முழுதுமாய்ந்து வாதாட்டம்நாமு மிவருடனே
நிந்தனைச்செய்ய லாகாதென்று நேர்மைஅகதஸை கைவிட்டாரே. ()

நீலாற்றுக்கு சீட்டனுப்பியது.

மிசுருபதிக்கொரு அப்ஸர்அமர் இப்னஆஸேன்போர் கவர்னராக
இசுலா மார்கத்தை விர்த்திசெய்ய ஏற்றஉமர்களீ பாவலுப்ப
விசுவாசமாக நடக்கும்நாளில் வியர்ந்துமிசுர்பதிக் கூட்டமெல்லாம்
பிசகாதப்ஸர் கவர்னரிடம் பிரியாதைசெய்தார் நீலாற்றிலே. (45)

தண்ணீரில்லாமற் காய்ந்துபோச்சு தண்ணீர்பெறுகயாம் செய்முறை
கள், பெண்ணொன்றுநல்ல அழகியாளை பிடவைநகையுடன் சிங்கா
ரித்து, நண்பொடுநடு நீலாற்றிலே நல்மேடைகட்டி பெண்ணைஎற்ற
தண்ணீர்பெறுகியே அந்தப்பெண்ணை தவறுகொண்டுபோம் நீர்
பெறுகும். (46)

இந்தபடியேமுன் மிசுரையாண்டோர் எப்போதும்செய்யும் வளமை
என்க, அந்தமொழிகேட்ட ஆஸ்மகனர் ஆகாதிச்செயல் மாற்ற

* முகத்தஸை என்பது, பைத்துல்.முகத்தஸை என்றறிக.

மென்று, இந்தவரலாரை மதினுநகர் ஏற்றஅரசர்க்கு எழுதிகேட்க
அந்தக்கடிதத்தை அரசர்கண்டு அதிகாரச்சீட்டை யனுப்பலுற்றூர்.

ஒன்றும்சீட்டிலே எழுதும்செய்தி அமரிப்னஆஸ் உமக்குஉமர்
அன்பாய்தெரிவிக்கும் விசளமது அடுத்தமறுசீட்டைத் தாமெடுத்து
நன்றுநீலாற்றில் போடுமதை நாட்டில்தீன்செங்கோல் உமர்உனக்கு,
இன்பா யனுப்பும்சீட் டிதுவேஎன்று எழுதிஇருந்தது விசளந்தானே.

மருசீட்டிற்கண்ட விசளமது மணஊற் றுக்காய்ந்த நீலாற்றுக்கு
சருகா தீன்செங்கோல்செய்யும்உமர் சாற்றலறிந்ததும் பெறுகிடும்நீர்
அருமைநீர் உன்னுல் பெறுகுமானுல் அதுவேண் டாம் அது ஆண்
டவனுல், பெறுகும்நீராக இருக்குமாகில் பிசகா தெப்போதும்
பெறுகவேண்டும். (49)

செங்கோ லிதுஉமர் நீதசேங்கோல் சிறப்பாயறிந்துக்கொள் நீலா
ரேன்க, சங்கைசீட்டதை ஆஸ்மகனுர் சருகாநீலாற்றில் சொல்லி
போட, பொங்கி வெள்ளமும் பெறுகிக்கொண்டு போவதிதுவரைக்
காய்ந்ததில்லை, சங்கை நாயகர் உமர்நீதத்தை ஜகத்தில்மூமினேர்
அறிவீர்களே. (50)

பலதேசம் பத்ஹுபெற்றும் தாழ்மையா யிருந்தது.

நூயகர்உமர் ராஜாங்கத்தில் நலத்தபதி ரூமும் ஷாமும்பல்கு, தாய
மாய் புகா ருஅஜ்மு தக்கமிசுரொத்த பெருந்தேசங்கள், நாயன் கிரு
பையால் பத்ஹுபெற்று நல்லார் நபிதீனை பிலப்படுத்தும், ஞாய
அனுவலால் பத்தேகானு ஆண்டுவரைசெங்கோல் செய்தார்களே.

உமர்(ரலி) வபாத் சேதிகேட்ட யஹூதி ஈமான் கொண்டது.

மன்னர்உமர்ரலீ மவுத்தின்சீக்கில் மவுலாஅலியுல்லா அடுத்தஊரில்
இன்பாய் ரணமாற்றும் பரிகாரியாம் யஹூதிடாக்டரை யழைத்துக்

கொண்டு, அன்பாய் வருகின்ற நடுவழியில் அலியுல் லாசொன்னர் பரிகாரிக்கி, மன்னர்உமர்ரலி மவுத்தாகிட்டார் மனங்கோணுபோங் கள் திரும்பிஎன்றார். (52)

அப்போயஹூதியு மாச்சரியமாய் அலியேநடுபாதை எவரும் சொல்லா, ஒப்ப முடன்உமர் மரித்ததாக உரைத்த வகைக்கூறும் அலியேஎன்க, மெய்பாய் பிரர்நிலப் பயிரைமாடு மேயுங் காரண மென்ககண்டு, அப்போதேகலி மாவையோதி அந்தப்பரிகாரி தீனிலா ஞர். (53)

நல்லார்நபியுல்லா உம்மத்திலே நாயன்நமைதாகில் செய்ததீனோர் எல்லாம் உமர்ரலி நடக்கைநாட்டம் எற்றநீதமு மறிந்துணர்ந்து சல்லாபமாக தலைவர்மற்றோர் சங்கைநீதமா யமல்கள்செய்ய, வல்லா னபிசொல்லு மிருஹதீதை வகுத்துவிச்சிறு நூல்முடிப்பாம். (54)

அறிவாளர் அமீர்தலமைக் காரருக்கு நல்மாராயம்.

ஹதீஸ்.

அறிவா ளர்அமீர் தலமைக்காரை அரிகண்டம்விலங் கவைகள்பூட்டி அறியப் பெரியவன் முன்னிறுத்த அவர்கள்நீதமாய் நடந்திருந்தால் தரித்து விலங்கதை ஜன்னத்திலே தாகிலாக்குவா ரல்லாவிட்டால் அரிகண்டங்கழட் டாமல்நாரில் ஆழ்வாரெனநபீ அருளிசெய்தார்.

இரண்டு றஹ்மத்து மிருலஅனத் திறங்கிறதுநாளும் அடியர்கள்மேல் திரமாந் தலமைக்கார் குடிகள்பாவம் தீதைச்செய்திடா காத்தால வாள், உரமாம்றஹ்மத்தோன் றெடுத்துமீக்கும் உற்றவர்பாவந் தட்டாமலே, பரமப்புவிநம்பும் தலைவானுக்கு பாரலஅனத்தோன் ரீவானென்றே, வரங்கள்பெறுகிடும் நபிஇரசூல் வழங்கினரிதை யறிந்துணர்வீர். (56)

இன்பாகஇந்த இருஹதீசுக் கேற்றமாகிய கடமையுள்ளார்
நன்றுஅரசரு மறிவாளரும் நாட்டாண் மைத்தொழில் முதலாளியும்
இன்பாங் குடும்பத்தி னதிகாரியும் இவைகள்போலொத்த தலைவ
மார்கள், தென்பாய்தனக்குகீழ் படிந்தோர்களின் தீங்குநலமவர்
தலையிலாமே. (57)

அன்பரேஉமர் ரலியல்லாஹுா அவர்கள்ராஜாங்கம் மிகுதேசங்கள்
நன்றோர் ஆள்கைபாய் நடத்திவந்தும் நானில வாழ்க்கை நம்பிடாமல்
என்றுமேழைமீபா விருந்ததுவு மேற்றநீதமாய் நடந்ததுவும், பன்னு
மின்னூலைப் பார்த்துதீனோர் பரிசுப் பேறஅமல் சேயகறுத்தே. (58)

அதிபதி வல்லான்முமினை ஆண்பேண்யாவர்க்கும் தவ்பீக் தந்து
நிதிநேர் நாட்டமாய் நடந்தஉமர் நேர்மையாளரின் பொருட்டினாலே
பதியில்தம்தம்மா லேன்றமட்டும் பக்திநீதமாய் நடந்தாகிரில்
மதிபோல் உமர்ரலீ மஜ்லீசிலே மருங்காம் அஹ்ஸனு சேர்க்கஆமீன்.

பிரஹ்மதிக யா அர்ஹமர் ருஹிமீன். வல்ஹம்து
லில்லாஹி றப்பில் ஆலமீன்.

தவ்லதே தாரைன் (என்னும்) இருலோக சம்பத்து
3-ம் பாகம்
முஅஜிஸாதே ரசூல்(மஅ) அதாலதே உமர்பாறூக்.
முற்றுப் பெற்றது.

இந்த தவ்லதே தாரைன் (என்னும்) இருலோக சம்பத்து என்னும் புத்தகம் றஹ்மானுதவியால் **1**-வது, **2**-வது, **3**-வது பாகங்கள் வெளிவந்தது. மற்ற **4**-வது, **5**-வது பாகங்களும், இன்ஷா அல்லாஹுா கூடிய சீக்கிரம் அச்சிட்டு வெளிப்படுத்த ஹக்தஆலா கிருபை செய்வானாக. ஆமீன்.